**எலஹர பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 24 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து எலஹர பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | களஞ்சியப் பொருட்கள் தொடர்பில் முற்பணக் கணக்கு முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | முற்பணக் கணக்கு முறை பின்பற்றப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபைக்கு அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்குரிய அனைத்து வருமானங்களும் உரிய முறையில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டியமை. | குறித்த நிறுவனத்துடன் நேரடியாக தொடர்புகொண்டு அதற்கு உடனடி தீர்வொன்றினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | பிரதேச சபைக்குரிய 36 காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரிய காணிகளின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு | எதிர்காலத்தில் மதிப்பாய்வொன்றினை மேற்கொள்ள உத்தேசிக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | | வைக்கப்பட வேண்டும். | |
| (iv) | களஞ்சியத்தில் எஞ்சியிருந்த ரூபா 37,500 பெறுமதியான Crusher Powder 300KG ஆனது இறுதி இருப்பினுள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி இருப்பு சரியாக கணக்கிடப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் ஆரம்ப இருப்பினுள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மற்றும் உரிய பட்டோலைகளின் பிரகாரம் 04 சொத்து உருப்படிகளின் பெறுமதியிலான ரூபா 48,458,435 ஆன இணக்கமின்மைகள் நிலவின. விபரங்கள் பின்வருமாறு. | சொத்துக்கள் பதிவேடு முறையாகவும் நாளதுரையாகவும் பேணப்பட வேண்டியதுடன், சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | இணக்கமின்மைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| கணக்கு தொடர்பான விபரம் | நிதிக்கூற்றின் பிரகாரம் மீதி | பட்டோலைகளின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கணனி மற்றும் உப பாகங்கள் | 1,236,037 | 1,046,547 | 189,490 |
| இயந்திர உபகரணங்கள் | 10,133,838 | 9,426,459 | 707,379 |
| மோட்டார் வாகனங்கள் மற்றும் தள்ளு வண்டிகள் | 191,217,190 | 146,219,823 | 44,997,367 |
| ஆயுதங்கள், பொறிகள் மற்றும் கருவிகள் | 3,749,631 | 6,313,830 | 2,564,199 |
| | மொத்தம் | | 48,458,435 |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 184,952,094 கூட்டுத்தொகையான 08 கணக்கு விடயங்களுக்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதிவேடுகளை தயாரிப்பதற்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- |
| **(அ)** | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | | | |
| (i) | 24 ஆம் பிரிவு | பிரதேச சபையினால் பாராமரிக்கப்படும் வீதிகளின் மற்றும் குறுக்கு வீதிகளின் நிரந்தர குறியீடுகளுக்காக மற்றும் எல்லைகளை அடையாளமிடல், திட்டத்தினை தயாரித்தல் மற்றும் அவற்றின் பெயர்ப்பட்டியலொன்றினை குறிப்பிட்டு அறிவித்தல் வெளியிடப்படவில்லை. | வீதிகளின் மற்றும் குறுக்கு வீதிகளின் நிரந்தர குறியீடுகளுக்காக மற்றும் எல்லைகளை அடையாளமிடல், திட்டத்தினை தயாரித்தல் மற்றும் அவற்றின் பெயர்ப்பட்டியலொன்றினை குறிப்பிட்டு அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களின் அதன் பிரகாரம் செயற்பட உத்தேசித்துள்ளளேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 60(iii) பிரிவு | சபைக்கு சொந்தமான வீதிகளை பயன்படுத்தி கற்கள், சரளைக் கற்கள், மணல் மற்றும் மண் கொண்டு செல்லும் போது உப விதியொன்றினை அங்கீகரித்து மீளாய்வாண்டிற்காக கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | போக்குவரத்து கட்டணங்களை அறவிடுவதற்கு உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் கற்கள், சரளைக் கற்கள், மணல் மற்றும் மண் கொண்டு செல்லல் தொடர்பில் உப விதியொன்றினை தாயரித்து அங்கீகரித்து கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | 135 ஆம் பிரிவு | வீத வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட பொது, சமய, புண்ணியக்கரும, கல்விசார் மற்றும் வீடுகள் விலக்களிக்கப்பட வேண்டிய ஆதனங்களின் பட்டியலொன்று தாயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வீத வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டிய ஆதனங்களின் பட்டியலான்று தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். |
| (iv) | 150(அ), 152(ஆ) மற்றும் 159(1) மற்றும் (2) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய ரூபா 22,238,706 பெறுமதியான நிலுவை வருமானம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் தொடர்பில அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளேன். |
| **(ஆ)** | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23(அ) பிரிவு | 05 கைத்தொழில்களின் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் காலாவதியடைந்திருந்த போதிலும், புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால், சபைக்கு கிடைக்க வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 18 கைத்தொழில்களில் 13 கைத்தொழில்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| **(இ)** | 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதிக் கோவை<br>---------------------------- | | | |
| (i) | 180 ஆம் விதி | பணம் அல்லது களஞ்சியத்திற்கு பொறுப்பாக செயற்படும் மற்றும் வருமானம் சேகரிக்கும் பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பணம் அல்லது களஞ்சியத்திற்கு பொறுப்பாக செயற்படும் மற்றும் வருமானம் சேகரிக்கும் பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | களஞ்சியத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து மற்றும் வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | 194 ஆம் விதி | நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேடுகளை பேணிச்செல்லல் மற்றும் அவை தொடர்பான வருடாந்த மதிப்பாய்வொன்றினை மேற்கொள்ள விதிக்கப்பட்டுள்ள பீ.எஸ். 45 மாதிரியின் பிரகாரம் அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேடுகளை பேணிச்செல்லப்பட வேண்டும் என்பதுடன், வருடாந்த மதிப்பாய்வுகளும் மெற்கொள்ளப்பட வேண்டும். | அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | 204 ஆம் விதி | 2017 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வின் போது 27 பொருள் விடயங்களுக்குரிய 214 உருப்படிகளின் பற்றாக்குறையொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பற்றாக்குறை தொடர்பில பரிசோதித்து, பிரதேச சபை விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பற்றாக்குறை தொடர்பில் மேற்படி தீர்மானம் எடுக்கின்றேன். |
| (iv) | விதி இலக்கம் 218 | பிரதேச சபைக்குரிய காணிகள் தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த கூட்டத்தில் ஆதன்ங்கள் தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் விசாரணையொன்றினை மேற்கொள்ள உத்தேசித்துள்ளேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஈ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>---------------------------- | | | |
| | நிதிப்பிரமாணம் 371 | பதவிநிலைத் தரமற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு 37 சந்தர்ப்பங்களில் ரூபா 803,650 ஆன தொகை பொருள் அல்லது சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. | பதவிநிலைத் தரமற்ற உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் செலுத்துவதை தவிர்க்க வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். |
| | | பணி நிறைவடைந்தும் பெற்றுக்கொண்ட முற்பணத் தொகை தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஏப்ரல் 12 முதல் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது 11 உறுதிச்சீட்டுக்களின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட ரூபா 284,800 ஆன தொகை 2019 பெப்ரவரி 20 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பணி நிறைவடைந்தும் உரிய முற்பணங்கள் உரிய காலத்தில் தீர்க்கப்பட வேண்டும். | அந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்குரிய பட்டியல்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டின் போது முற்பணங்களை தீர்ப்பதற்கு உரிய அறிவுரைகள் இன்றளவில் வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | நி.பி. 1647 | மீளாய்வாண்டின் போது ரூபா 336,979 செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட வாகன பழுதுபார்த்தல்களுக்குரிய விபரங்கள் சம்பவக் குறிப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன பழுதுபார்த்தல்களுக்குரிய விபரங்கள் சம்பவக் குறிப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | சம்பவக் குறிப்பு புத்தகங்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,134,529ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,792,441 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 336,577 | 340,682 | 598,821 | 785,795 | 336,577 | 336,675 | 188,785 | 988,228 |
| (ii) | வாடகை | 1,488,000 | 1,336,000 | 1,185,635 | 944,700 | 1,199,700 | 1,272,000 | 671,700 | 790,710 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 800,000 | 983,018 | 983,018 | - | 550,000 | 221,710 | 22,710 | - |
| | மொத்தம் | 2,624,577 | 2,659,700 | 2,767,474 | 1,730,495 | 2,086,277 | 1,830,385 | 878,195 | 1,778,938 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் அதிகாரப் பிரதேசத்திறகுரிய பதிவேடுகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரித் தொகை ரூபா 785,795 ஆகும். | நிலுவை வீதவரியிளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணப்படும் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கால அடிப்படையில மதிப்பீடுகளை மேற்கொள்ளாது 2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வீதவரி மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | 5 வருடங்களுக்கு ஒரு தடைவ வீதவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | சபைக்குரிய வீதவரி ஆதனங்களை மதிப்பீடு செய்து தருமாறு விலைமதிப்பீட்டு திணைக்களதில் இன்றளவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பெறுமானத் தேய்வு பரிசோதனையில் போது இனங்காணப்பட்ட குப்பை வரி அறவிடப்பட வேண்டிய 459 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை குப்பை வரி வருமானம் ரூபா 180,150 ஆகும். | குப்பை வரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் மே மாதம் முதல் குப்பை வரியினை பெற்றுக்கொள்ள உத்தேசித்துள்ளேன். |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பிடப்பட்ட வாடகை திருத்தப்பட வேண்டிய போதிலும், சபையினால் 2008 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாது, 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தற்காலக மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு மீளாய்வாண்டிற்காகவும் கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது. | 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பிடப்பட்ட வாடகை திருத்தப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் விமைதிப்பீட்டு திணைக்களத்தினூடாக புதிய மதிப்பீடொன்றை மேற்கொள்ள கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபையின் கடை வாடகை ஒப்பந்தங்களில் பெரும்பாலானவை 10 வருடங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்டவை என்பதுடன், 70 கடைகளின் ஒப்பந்தங்களை நாளதுவரையாக்குவதற்கு மற்றும் புதிய உடன்படிக்கைகளை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவைக்கேற்ப கடைகளின ஒப்பந்தங்கள் நாளதுவரையாக்கப்பட வேண்டியதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் புதிய உடன்படிக்கைகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டும். | புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது ஜே.சீ.பீ இயந்திரம், மோட்டார் கிரேடர் இயந்திரம் மற்றும் கல் ரோல் ஆகியவை வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும், | பெற வேண்டிய பணம் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | வழங்கப்பட்டுள்ள பதில் தெளிவற்றதாகும். |

| | | |
|---|---|---|
| அதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 532,350 ஆன தொகை 2019 பெப்ரவரி 27 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) தெஹிவத்த வாரச்சந்தை காணியில் கடைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 4,374,750 தொகையான கேள்வித் தொகையொன்று 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிலுவையாக இருந்தது. | பெற வேண்டிய பணம் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2019.05.31 ஆந் திகதியளவில் நிலுவைப் பணத்தில் ரூபா 1,302,550 அறவிடப்பட்டுள்ளது. |

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரின் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 11,864,320 மற்றும ் 2018 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானமான ரூபா 655,803ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய வருமானம் இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 11 விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்படவில்லை. | உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய விடயங்கள் இனங்காணப்பட்டு உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உப விதிகளை விதித்து அமைச்சருக்கு அனுப்பப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 யூலை முதல் திசெம்பர் வரையான 06 மாதங்களுக்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையில் நாளாந்தம் சேரும் சுமார் 03 டொன் அளவான குப்பைகளை சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் அகற்றுவதற்காக சபைக்கு தேவையான பௌதீக மற்றும் மனிதவளங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | சூழலுக்க பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் கழிவுகள் அகற்றப்பட வேண்டியதுடன், அதற்கு தேவையான சொத்துக்கள் விநியோகிக்ப்பட வேண்டும். | நிலத்தினை பெற்றுக்கொள்ள 2014 ஆம் ஆண்டு முதல் எலஹர பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்த போதிலும், சட்டரீதியாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்கு சொந்தமான 04 கடைகளின் உடன்டிக்கையாளர்களால் சபையின் அங்கீகாரமின்றி நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குத்தகைக்கு வழங்குதல் முறையான ஒப்பந்தத்தின் மூலம் கையளிக்கப்பட வேண்டும். | வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு மற்றும் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதாக. |
| (இ) | 2018 திசெம்பர் 31 ந் திகதியில் உள்ளபடியான மருத்ததுவமனை வீதியின் இடது இலக்கம் 01 உடைய கடையின் நிலுவை குத்தகை வாடகையானது ரூபா 69,000 தொகையாக உள்ளதுடன், பக்கமூன வாரச்சந்தை பூமியில் இலக்கம் 01 உடைய கடையிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 12,0000 ஆகும். | நிலுவை குத்தகை வாடகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைக் வாடகையிளை அறவிடுவதற்கும் செலுத்தாதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான அரிசி மா தயாரிப்பு இயந்திரம் மற்றும் டபள் கெப் வண்டியொன்று விளைவற்றுக் காணப்பட்டது. | விளைவற்ற சொத்துக்களை பயனுள்ள விதத்தில் பயன்படுத்த வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான வருமான | வருமான மற்றும் செலவின மூலங்கள் | 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டு |

| | | |
|---|---|---|
| மற்றும் செலவின மூலங்கள் இனங்காணப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையால் 5 வருமான விடயங்களின் 48-56 சதவீதம் வரையான விலகள்கள் நிலவியதுடன், 08 செலவின விடயங்களின் 10-134 சதவீதம் வரையான விலகள்கள் நிலவின. | உரிய முறையில் இனங்காணப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பங்களிப்பு வரவு செலவுத் திட்டமொன்றாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். |

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வட மத்திய பிரதான செயலாளரின் என்சீபீ/சீஏ/01 ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் 2016 மே 11 ஆந் திகதிய கடித்தின் மூலம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது ஒவ்வொரு 02 மாதங்களுக்கு ஒரு தடவையும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் ஒன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் உரிய முறையில் நடாத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நடாத்தப்படுமென அறிவிக்கின்றேன். |

## 4.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தூரப்பயண பேரூந்து தரிப்பிடம் மற்றும் வியாபாரக் கட்டிடத் தொகுதியின் நிர்மாணச் செயற்திட்டம் தொடர்பில் சாத்தியவளக் கற்கையொன்றினை மேற்கொண்டிராததுடன், உத்தேச காணியின் கருங்கற்களை உடைத்து அகற்றுவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் காணியில் அமைந்துள்ள கருங்கல்லினை அகற்றுவதற்காக ரூபா 13,163,228 செலவிடப்பட்டிருந்த போதிலும், பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் தூரப்பயண பேரூந்துகளை நிறுத்துவதற்காக எலஹர பல்நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு உரிய காணியொன்று தெரிவு செய்யப்பட்டு ரூபா 50 மில்லியன் செலவிடப்பட்டு பேரூந்து தரிப்பிடமொன்றினை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை யால், இதற்காக செலவிடப்பட்ட மொத்த தொகையும் விளைவற்றதாகியிருந்தது. மேலும், இயந்திரத்தினை பயன்படுத்தி கல்லினை வெடி பொருட்களை இட்டு வெடிக்க வைக்கும் பணிகளுக்களில் | விளைவற்ற செலவினங்கள் ஏற்படாத வகையில் செயற்படல் வேண்டும். சபையின் இயலளவின் பிரகாரம் மேற்கொள்ளக்கூடிய செயற்திட்டங்கள் சிக்கனமாக மேற்கொள்ளப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். |

ஈடுபட்டுள்ள பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு மற்றும் பயிற்றுவிக்கப்படாத ஊழியர் ஒருவருக்கு 15 மாத காலப்பகுதியினுள் ரூபா 12,329,136 ஆன கட்டணமொன்றினை செலுத்தியமை பிரச்சினைக்குரியதாக இருந்தது. ரூபா 9,904,960 ஆன கட்டணங்களை அறவிடுவதற்கு ஒப்பந்ததாரரினால் சபைக்கு அழைப்பாணையொன்று பிறப்பிக்கப்பட்டிருந்தது.